மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடு) ஒரு முக்கியமான அறிவிப்பு இருக்கிறது, உட்காருங்கள்.*

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

3. விதி 110—ன்கீழ் அறிக்கை

மூத்த குடிமக்கள் சென்னை மாநகரப் பேருந்துகளில் கட்டணமின்றி பயணிக்கும் வசதி குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110—ன்கீழ் அறிக்கை அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலின்போது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தபின், தமிழக மக்களின் நலன் காக்கும்வகையில் எவ்வாறெல்லாம் செயல்படும் என்பதுபற்றி அப்போது வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் மிகத் தெளிவாக நாங்கள் குறிப்பிட்டிருந்தோம். 'இதய தெய்வம் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் காட்டிய வழியில் எங்களது புனிதப் பயணம் அமையும்' என்ற வாக்குறுதியை அளித்திருந்தோம். 'தமிழகம் ஒருங்கிணைந்த வளர்ச்சிப் பாதையில் பீடு நடை போட நடவடிக்கை எடுக்கப்படும்' என்றும், 'கல்வி, மருத்துவம் விவசாயம், நதி நீர், அடிப்படைக் கட்டமைப்பு, வீடு, மின்சாரம் மற்றும் தொழில் துறை வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும்' என்றும், 'தமிழ் இளைஞர்கள் மற்றும் இளம்பெண்கள் தலைநிமிர்ந்து சொந்தக்காலில் நிற்பதற்கான வழிவகுக்கப்படும்' என்றும், எங்களது இலட்சியத்தைப்பற்றிக் குறிப்பிட்டிருந்தோம். இந்த இலட்சியத்தை எய்துவதற்கு, துறைதோறும் எடுக்க உள்ள நடவடிக்கைகள்பற்றியும் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தோம்.*

2016 பிப்ரவரி 18] [செல்வி ஜெ ஜெயலலிதா]

எங்களது தேர்தல் அறிக்கையில் முதன்மைத் துறை, உற்பத்தித் துறை மற்றும் சேவைத் துறை ஆகியவை எவ்வாறு மேம்படுத்தப்படும் என்பதுபற்றி தெரிவித்திருந்ததோடு, மாணவர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர்கள், இளைஞர்கள், தாய்மார்கள், முதியோர்கள், ஆதரவற்றோர், ஆதி திராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் என ஒவ்வொரு பிரிவினருக்கும் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்கள்பற்றியும் வாக்குறுதி அளித்திருந்தோம்.

மூத்த குடிமக்களுக்கு அரசுப் பேருந்தில் பயணம் செய்ய கட்டணமில்லா பஸ் பாஸ் வழங்கப்படும் என்ற வாக்குறுதியை தேர்தல் அறிக்கையில் நாங்கள் அளித்திருந்தோம். இந்த வாக்குறுதியை நிறைவேற்றும்வகையில், முதற்கட்டமாக, சென்னை மாநகரப் பேருந்துகளில் மூத்த குடிமக்கள் கட்டணமின்றி பயணம் செய்யும் வகையிலான ஒரு திட்டம் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இதன்படி, 60 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் குளிர்சாதன வசதி இல்லாத, சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழக அனைத்துப் பேருந்துகளில் கட்டணமில்லாமல் பயணம் செய்யலாம். இதற்கென மாதத்திற்கு 10 டோக்கன்கள் வழங்கப்படும். பேருந்து நடத்துனரிடம் இந்த டோக்கன்களைக் கொடுத்து, கட்டணம் ஏதும் இல்லாமல் மூத்த குடிமக்கள் பயணம் செய்யலாம்.

முற்பகல் 11–30

இந்தத் திட்டத்தைப் பயன்படுத்திக்கொள்ள விழைவோர், அதற்குரிய படிவத்தில் தங்களது புகைப்படத்தினை இணைத்து, அடையாள அட்டை மற்றும் டோக்கன்களைப் பெற்றுக்கொள்ளலாம். இதற்கான விண்ணப்பப் படிவத்தை போக்குவரத்துத் துறையின் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். இந்த விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட பஸ் டெப்போக்களிலும் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட பஸ் டெப்போக்களில் கொடுத்து, அடையாள அட்டை மற்றும் டோக்கன்களைப் பெற்றுக்கொள்ளலாம். எந்தெந்த பஸ் டெப்போக்களில் இந்த வசதி செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் போக்குவரத்துத் துறையின் இணையதளத்தில் வெளியிடப்படும். விண்ணப்பங்கள் கொடுப்பதற்கென கடைசி தேதி என்று எதுவும் நிர்ணயம்

செய்யப்படவில்லை. தேவைப்படுவோர் இதற்கான விண்ணப்பத்தை எப்போது வேண்டுமானாலும் அளிக்கலாம். சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் மூத்த குடிமக்கள் கட்டணம் இல்லாமல் பயணம் செய்யும் இந்தத் திட்டம், 24–2–2016 முதல் நடைமுறைப்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் புதிய திட்டத்திற்கு பொது மக்களிடையே உள்ள வரவேற்பைக் கண்டறிந்து, மற்ற இடங்களுக்கும் இது விரிவுபடுத்தப்படும்.

என்னுடைய இந்த அறிவிப்பின்மூலம் 2011 ஆம் ஆண்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில், எங்களால் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டுள்ளன (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதிகளுக்கும் மேலாக, பல்வேறு நலத் திட்டங்களையும் எனது தலைமையிலான அரசு செயல்படுத்தியுள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. மூத்த குடிமக்கள் சென்னை மாநகரப் பேருந்துகளில் கட்டணமின்றி பயணிக்கும் வசதி–முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

முனைவர் செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011–ல் தேர்தலிலே களம் கண்டபோது போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தின் மூலைமுடுக்குகளிலெல்லாம் சுற்றிவந்தபோது, தந்த வாக்குறுதிகளின் கடைசி வாக்குறுதியையும், இந்தக் கடைசிக் கூட்டத் தொடரிலே (மேசையைத் தட்டும் ஒலி) நிறைவேற்றி வைத்திருக்கிறார் என்கிற தித்திப்பான செய்தியை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதுவும் வரும் 24 ஆம் தேதி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பிறந்த நாள் அன்று (மேசையைத் தட்டும் ஒலி) அது நடைமுறைப்படுத்தப்படவிருக்கிறது என்கிறபோது ஏற்படுகிற மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ஒரு சாதனையாளர், சரித்திரம் படைக்கிற ஒருவர், யாராக இருந்தாலும், வரலாற்றிலே எத்தனை வேதனைகளை, எவ்வளவு துயர்களைத் தாங்கிக்கொண்டு அதனை